# வாகனத்தில் பாதுகாப்பு

உங்கள் குழந்தையின் பாதுகாப்பிற்கு, தகுந்த கார் இருக்கையை வைத்திருப்பது முக்கியம் ஆகும். உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றுவதன் மூலம் இருக்கை பொருத்தப்பட வேண்டும்.

ஏப்பிரல் 1, 2010 முதல் 12 வயதுக்குட்பட்ட அல்லது 150செ.மீ க்கு குறைவான குழந்தைகளுக்கு வாகன இருக்கை கட்டாயம் ஆகும்.

## சட்டம் என்ன சொல்லுகிறது



பிரிவு 0+, 13 கிலோவுக்கும் குறைவு: பின்புறம் எதிர்கொள்ளும் வகையில் மூன்று புள்ளி சேணம் பொருத்தப்பட்டு மூடிய இருக்கையில் குழந்தை பயணிக்க வேண்டும். இது சீற் பெல்ற்றைப் பயன்படுத்தி அல்லது **isofix** தடி சுழற்சிக்கு எதிரான **(anti-rotation)** வகை நங்கூர பாதத்தைப் பயன்படுத்தி சரியான முறையில் பொருத்தப்படுகிறது, இது ஒவ்வொரு பயணத்திற்கும் மூடிய இருக்கையை விரைவாகப் பொருத்த உதவுகிறது.



பிரிவு 1, 9 முதல் 18 கிலோ வரை: தேர்ந்தெடுக்கப்பட்ட இருக்கையை பொறுத்து, முன்புறமாகவோ பின்புறமாகவோ இருத்தும் வண்ணம் இருக்கையில் சேர்க்கப்பட்ட 5புள்ளி சேணம் மூலம் குழந்தை தனது இருக்கையில் வாகனத்தின் பின் வரிசையில் இருத்தப்பட வேண்டும்.



பிரிவு 2 –3 : பிரிவு 2 மற்றும் பிரிவு 3, 15 முதல் 36 கிலோ அல்லது அதற்கு மேற்பட்டது. இந்த பிரிவு சிறந்த வாகன இருக்கைகள், உயர்த்திய இருக்கை முதுகு பாதுகாப்புடனும் தலைப்பகுதி சாய்வதிற்குமான வசதிகளை கொண்ட இருக்கைகள் உள்ளன. குழந்தையையும் அவரது இருக்கையையும் பாதுகாக்கும் வண்ணம் பெல்ட் கட்டப்பட வேண்டும்.

## சில குறிப்புக்கள்

- முடிந்தவரை, குழந்தையின் இருக்கையை பின் வரிசையில் பொருத்துவது நல்லது. நீங்கள் அதை முன் வரிசையில் பொருத்தினால், பாதுகாப்பு காற்றுப்பையை **(air-bag )** செயலிழக்கச் செய்யுங்கள்.

- உங்கள் குழந்தையின் உயரத்திற்கு மிகவும் பொருத்தமானதாகவும் முடிந்தவரை வசதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட இருக்கையைத் தேர்வு செய்யவும் **(TCS**இன் இணையத்தளத்தில் **orange** லேபிளைப் பார்க்கவும்**)**

- குழந்தையின் தலை இருக்கைக்கு மேலாக வரும் பொழுது மட்டும் இருக்கையை மாற்றவும், இருக்கையின் பொருத்தும் பகுதிகளையும் பொருத்திய விதம் சரியானதாக உள்ளதா என்று ஒவ்வொரு தடவை பாவிக்க முன்னரும் சரி பார்க்க வேண்டும்.

- உங்கள் குழந்தைக்கு எவ்வாறு பெல்ட்ரை கட்டுவது என்பதில் கவனமாக இருங்கள்: முறுக்கப்பட்டபடி, மிகவும் தளர்வாக கட்டுதல் அல்லது கழுத்துக்கு அருகில் பெல்ட் செல்லுதல் போன்றவற்றால் பெல்ட் கட்டியது பயனற்றதாகப் போய்விடும்.

- குளிர்கால ஜாக்கெட்டுகளைத் திறக்கவும் அல்லது அவற்றை அகற்றவும். பெல்ட் உடலுக்கு நன்றாக ஒட்டியவண்ணம் இருத்தல் வேண்டும்.



## நல்ல பழக்கங்கள்

- நான் எப்போதும் என் குழந்தையை அவரது இருக்கையில் இருத்தியே கூட்டிச்செல்வேன், ஒரு சிறிய பயணத்திற்கு கூட நான் அவரை என் மடியிலோ, ஒருவரின் மடியிலோ கொண்டு செல்ல மாட்டேன்.

- நீண்ட பயணங்களின் போது, ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் இடைவெளி அவசியம். இது அவரை இருக்கையிலிருந்து வெளியே அழைத்துச்செல்லவும், உணவளிக்கவும், டயப்பர் மாற்றவும் மற்றும் நீர் அருந்தவைக்கவும் உதவுகிறது, குறிப்பாக வெய்யில் காலத்தில்.

- நான் சூரியஒளியிலிருந்து அவரை ஒரு சூரியதடைதட்டால் **(pare-soleil)** அல்லது கதவு ஜன்னனில் துணி ஒன்றால் மூடி பாதுகாக்கிறேன்.

- வாகனங்களில் புகைபிடிப்பது உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தானது.

## முக்கியமானது

- பின்புற இருக்கைகளே மிகுந்த பாதுகாப்பான இருக்கைகள் ஆகும். இது பெரியசிறுவர்களுக்கும் பொருந்தம்.

- உங்கள் குழந்தையை ஒரு போதும் வாகனத்தில் தனியாக விடாதீர்கள்

- சீற் பெல்ட் சரியாகவும் இறுக்கமாகவும் பொருத்தும் வகையில் உறுதிசெய்யவும்

- சில இணைய முகவரிகள்: www.bpa.ch – www.tcs.ch - www.pipades.ch

பொருத்தமான இருக்கை தெரிவு செய்தல், குழந்தையை சரியான முறையில் கட்டுதல், இவற்றின் மூலம் பாதுகாப்பாக நான் சவாரி செய்கிறேன்!

- திடீர் பிரேக் அல்லது தாக்கம் ஏற்பட்டால் பொருட்கள் அவரின் மீது வீசப்படுவதையும் விழுவதையும் தவிர்க்க பின்புற மேல்தட்டு (டிக்கியின் மேல் தட்டு) வெளிப்பாக இருக்க வேண்டும்.